
தாயுமானவர்
வழிபாடு ஏன்?
மன்னார்குடி பானுகுமார்
ராஜம் பதிப்பகம்
இணையதளத்தில் banukumar.in

# தாயுமானவர் வழிபாடு ஏன்?

தாயுமானவர்- ஒரு அவதார புருஷர். அவர்- இன்றும் வாழ்கிறார். நாமும் அவருடன் வாழ முடியும்.

அவரை வழிபட்டு- அவருடன் வாழ்வது, நமது வாழ்க்கைக்கு- ஓர் ஆழ்ந்த பொருளைக் -கொடுக்கும். வாழ்க்கையில் -நிம்மதி பிறக்கும்.

தாயுமானவரை வழிபடுவதுடன் -அவரது வாழ்க்கையைப் போல் நம் வாழ்க்கையும்- மாற்றிக் கொள்ள -முயற்சிக்க வேண்டும். அதில்தான் -தாயுமானவர் வழிபாட்டின்- அடிப்படைத் தத்துவமே அடங்கியுள்ளது.

தாயமானவரை வணங்குவதும்- வழிபடுவதும் மட்டும்- போதாது. அவரை- வாழ்ககை லட்சியமாகவும் கொள்ள வேண்டும்.

தாயுமானவரிடம்- இயல்பாகவே திகழ்ந்த -பண்பு நலன்களை நாம் மனப்பூர்வமாக- நம்மில் நிறைக்க வேண்டும். வளர்க்க வேண்டும்.

அத்தகைய -முக்கிய பண்புநலன்களாக –தாயுமானவர்- நமக்கு சொன்னவை எவை? காமம், பேராசை மற்றும் புலனின்ப நாட்டத்தை விடுதல் மற்றும் துறவு.

மனிதனின் -துன்பங்களுக்கு காரணம் என்ன? இதற்கு விடையாக நமது சாத்திரங்கள்- எண்ணற்ற காரணங்களைக் காட்டுகின்றன.

ஆனால் -"காம மற்றும் பேராசை என்ற இரண்டு மட்டுமே" என்பதுதான் -தாயுமானவரின் -எளிய மதிநுட்பம் மிக்க பதில்.

தாயுமானவரின் பாடல்களை ஆராய்ச்சி செய்த பேராசிரியர் ஒருவர், " நமது சமுதாயத்தின் பிரச்சினைகளுக்கு- தாயுமானவர்தான் தீர்வு -என்றுதான் -எனக்குத் தோன்றுகிறது.

இன்றைய- நமது சமுதாயத்தைப் பண-மன்னனும் (காஞ்சனம்) காம-ராணியும் (காமம்) தான் -இழுத்துச்செல்கின்றனர். இந்த இரண்டிற்கும்- சிறந்த தீர்வாக உள்ளன- தாயுமானவரின் உபதேசங்கள்.

---

எதையும் உண்மையெனக் கண்டால் ,அதனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு, மனம்,மொழி, மெய்யால் பின்பற்றி, அதன் அடியாழம்வரை செல்லாமல்- தாயுமானவரின் -அசாதாரண மனம் நிலை கொள்வதில்லை.

காமம் மற்றும் பேராசை, தன்முனைப்புதான் -தீமைகள் அனைத்திற்கும் மூலகாரணம் என்பதை- தமது ஈடிணையற்ற -ஆன்மீக சாதனைகளின் விவைாகக் கண்டபோது- அதனைச் சுவடின்றி முற்றிலுமாகத் துறந்தார்- தாயுமானவர்.




அவரது பெரு வாழ்வைப் படிக்கின்ற யாரும்- அவரது காம காஞ்சனத் துறவைக் கண்டு -வியக்காமல் இருக்க முடியாது.

அடுத்தது, புலனின்ப நாட்டத்தை விடுதல். புனின்ப நாட்டம் என்பது- இன்றைய சமுதாயத்தின் சாபக்கேடாக உள்ளது.

எத்தனை வழிகளில் இன்பங்களை அடைய முடியுமோ- அத்தனை வழிகளிலும்-அவற்றை வரம்பின்றித்தான்- அடையத் துடிக்கின்றான் மனிதன்.

விஞ்ஞானமும் தொழில் நுட்பங்களும்- போடடிபோட்டுக் கொண்டு -அதற்கான புதுப்புது வழிகளை -அவனுக்குக் காட்டிக் கொண்ருக்கின்றன.

இந்தப்- பௌதீக நாட்டத்தின் காரணமாக- மனம் வளம் குன்றுகிறது. ஆற்றலை இழக்கிறது.

நங்கூரம் இடப்படாத கப்பல்- எப்படி புயலால் தாக்கபட்டு அழிகிறதோ- அவ்வாறே -மனம் புலனின்பங்களை நாடும்போது- நுட்பத்தை இழந்து – அழிகிறது- என்று நமது சாத்திரங்கள் எச்சரிக்கின்றன.

இத்தகைய நிலைமையிலிருந்து- மனிதன் தன்னை எவ்வாறு காத்துக் கொள்வது என்பதை எடுத்துக் கூறி- தாயுமானவரின் பெருவாழ்வும் – உபதேசங்களும்- அவனை வழிநடத்துகின்றன.

புலனின்பப் பொருட்கள் -எவ்வளவுதான் சூழ்ந்திருந்தாலும்- அவற்றில் பற்றிறன்றி வாழந்தால் -பேரானந்த வாழ்வு வாழலாம் என்பதை -தாயுமானவர் -தமது வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினார்.

தாயுமானவர் வாழ்ந்தது போல் -காமத்திலும் -பேராசையிலும் -புலனின்பங்களிலும் – தன்முனைப்பிலும்- வரம்பற்ற நட்டத்தை விட்டு, பற்றற்ற வாழ்க்கை வாழும்போது, மனிதன்- துயரமின்றி வாழலாம். இதுவே- தாயமானவருடைய வாழ்க்கையின் செய்தியாக உள்ளது.

அடுத்தது- துறவு. ”துறவும் தொண்டும் -இந்தியாவின் தேசிய லட்சியங்கள். இந்த இரண்டின் பாதையில் -இந்தியாவை வழிநடத்துங்கள். மற்றவை தானாக நடைபெறும்” என்பார் சுவாமி விவேகானந்தர்.

அனைவரும் -காவி உடுத்து -துறவு நெறியை மேற்கொள்ள வேண்டும் என்றோ -பிச்சைக்காரகளாச் சுற்றியயலைய வேண்டும் என்றோ -விரும்பினாரா அவர். ஒரு போதும் இல்லை.

தாயுமானவர் கூறிய துறவு இதுவல்ல. துறவின் நோக்கம் -பற்றறுத்தல்- எந்தப் பொருளோ –மனிதர்களோ- சூழ்நிலைகளோ -கட்டுப்படுத்தாமல் சுதந்திரமாக வாழ்தல் தான் -தெய்வீகமானவன். உறவிலே கண்ட தெளிவுதான்- துறவாகும்.

ஏற்றத்தாழ்வு, வறுமை, அநீதி போன்ற சமுதாயக் கொடுமைகளுக்கு துறவு உணர்வே தீர்வு.

தாயுமானவரின் -இணையிலா துறவு- இன்றைய காலக்கட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. ”துறவே” தாயுமானவரின் அணிகலனாக விளங்குகிறது.

மேலே கண்ட- காமமின்மை, பேராசை விடுதல்- மற்றும் துறவு என்ற -மூன்று முக்கிய பண்புநலன்களைத் தவிர

---

1. உண்மை,
2. அகங்காரம் இல்லாமை,
3. எளிமை,
4. பணிவு.
5. கனிவு,
6. முப்பதாயிரம் படையை திரட்டிக் கொண்டு போர்த்துக்கீசயரை விரட்டி அடித்த துணிவு,
7. அன்பு,
8. கருணை,
9. நாட்டை நிர்வகிக்கின்ற நிர்வாகத் திறன்
10. சாணக்கியரைப் போல் போர்த்துக்கீசிய படையை விரட்டிய சாணக்கியத்தனம்
11. அமைச்சராக இருந்த ஊரிலேயே கோவணாண்டியாகத் திரிந்த துறவின் உச்சம்,
12. ஈகை,
13. அறநெறி

போன்ற பண்புகளுக்கும் -தாயுமானவர் உறைவிடமாகத் திகழ்ந்தார்.

இத்தகைய பண்புகள்- மனித வாழ்வில் இடம்பெறும்போது- சமுதாய வாழ்வு எவ்வளவு இனிமையாக, வளமானதாக, இருக்கும்.

மேலே கண்ட இல்டசியப் பண்புநலன்களை வளர்த்து- எப்படி நாம்- நிறை மனிதர்களாகப் பரிணமிப்பது?

அதன் மூலம் –எப்படி- சமுதாய வாழ்வில் மாற்றம் காண்பது?

தாயுமானவரின்- திருவடிகளில் சரணடைவதன் மூலம், ஆன்மீக சாதனைகள் மூலம் -அதற்கான தகுதியை வளர்த்துக் கொள்வதன் மூலம் என்று, தாயுமானவர் வாழ்வு -நமக்கு பாடம் புகட்டுகிறது.

தாயுமானவரது திருவடிகளில் சரணடைகின்ற ஒருவனிடம் -இந்தப் பண்புகள் வளர்கின்றன. அவன்- புலன்களின் மீதுள்ள பற்றிலிருந்து விடுபடுகிறான். வாழ்க்கை லட்சியத்தை அடைகிறான்.

---

எனவே தாயுமானவரின் வழிபாடு என்பது தனிமனிதனைப் பண்பாளனாக உருவாக்கவும் அதன் வாயிலாக சமுதாயத்தில் மாற்றம் காணவும் மிக முக்கியமான ஒன்று.

"நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே

மஞ்சன நீா  பூசை கொள்ள வாராய் பராபரமே" (பராபரம்.151)

கோயில், தேவலாயம். மசூதி என்று -எங்கே சென்றாலும்- நமக்குத் தேவை- ஆன்மீக வழிப்புணர்வு.  அந்த விழிப்புணர்வின் விளைவாக - நம்மில் வருகின்ற -அக மாற்றங்கள்.

எத்தனையோ நூற்றாண்டு காலமாக- இத்தகைய வழிபாட்டை –நாம்- இழந்துவிட்டிருந்தோம்  அதனை நமக்குத் தருவதற்கே வந்தார்- தாயுமானவர்.




தாயுமானவரின் வரவினால் -கோயில்கள் மேலும் உயிருணர்வுடன் திகழும்.  உணர்ந்த பண்பு நலன்களுடன் கூடிய -மனிதர்களை உருவாக்குகின்ற கேந்திரங்களாக- அவை திகழும்.

மனிதனுக்கும், ஏன், உல்லா உயிரினங்களுக்கும்- தொண்டு செய்தவற்கான-மனநிலையை நம்மில் வளர்க்கின்ற பண்பாட்டுக்  கூடங்களாக அவை திகழும்.

தாயுமானவரின் வழிபாடு என்பது -தெய்வங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான- முயற்சி அல்ல.

மற்ற தெய்வங்களைவிட- இவர்தான் அதிகமாகப் பிரார்த்தனைகளைக் கேட்பார் என்றெல்லாம் -ஒப்புமைப்படுத்துவதற்கான முயற்சியும் அல்ல.

மாறாக, தனிமனிதனையும் -சமுதாயத்தையும் மாற்றி அமைப்பதற்கான செய்தியுடன் வந்த -ஓர் அவதார புருஷர் காட்டுகின்ற பாதையில்- செல்வதற்கான ஒரு முயற்சியே தாயுமானவர் வழிபாடு.

தாயுமானவருடன் வழிபடுவோம். தாயுமானவர் தந்த-- சிந்தனையை ஏற்போம். தாயுமானவர் வழியில் --செல்வோம். தொண்டாற்றி ஆனந்தமடைவோம்! ஆனந்தம் –ஆனந்தம்- ஆனந்தமே!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே!!!